**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.47/2022**
**Deposition of witness of Plaintiff – P.W.1(மாமுண்டி )**
**07.09.2023**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்க்கவில்லை. பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்களா என்று கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. வழக்கு 5ம் பிரதிவாதி மாரியப்பன் தென்னலூர் ஊராட்சியில் ஊராட்சி மன்ற உறுப்பினராக உள்ளார் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் 5ம் பிரதிவாதியின் பங்காளிகள் ஆவர். பெரியம்மாள் என்பவர் எனது சித்தப்பா மகள் ஆவார். இந்த நீதிமன்றத்தில் நடைபெறுவதாக வழக்குரையில் சொல்லியுள்ள பாக வழக்கின் வழக்கு எண் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனத்திற்கு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பெரியகுறும்பபட்டிக்கும், எனது ஊரான சாலைக்களத்திற்கும் இடையே நடைபெற்ற தார்சாலை பணியை நான் தடுத்துவிட்டேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் தடுத்தது தொடர்பாக 5ம் பிரதிவாதி மற்றும் அரசு அதிகாரிகள் சேர்ந்து உயர் நீதிமன்ற கிளையில் உத்தரவு பெற்று தார்சாலை அமைத்துள்ளார்கள் என்றால் அவர்களது மனு உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் தார்சாலைஅமைத்துவிட்டார்கள்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2023.09.07 18:16:30 +0530